# தமிழர் கல்விப் மேம்பாட்டுப் பேரவை

**TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL**


# அரையாண்டுத் தேர்வு

# 2014 - 2015

# தமிழ்மொழி

## வளர் தமிழ் 10

சுட்டெண்:............................................................ நேரம்: 180 மணித்துளிகள்

**1) தேர்விடை வினா - சரியான விடைக்குரிய எழுத்தின் கூட்டில் புள்ளடி இடுக.**

1. தொகைநூலுக்கு ஓர் எடுத்துக்காட்டு

அ) பட்டினப்பாலை ஆ) முல்லைப்பாட்டு

இ) நெடுநல்வாடை ஈ) அகநானூறு

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

2. காலையிளம் பரிதியிலே அவளைக் கண்டேன்.... என்ற பாடலைப் பாடியவர்

அ) புகழேந்தி ஆ) இளங்கோவடிகள்

இ) கம்பர் ஈ) கனக.சுப்புரத்தினம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

3. மொழிக்கு முதலில் வராத எழுத்துகளின் எண்ணிக்கை

அ) 100 ஆ) 30 இ) 20 ஈ) 147

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

4. தமிழர் உடைமை எனக் கண்ணதாசன் கூறுவது

அ) அச்சம் ஆ) அஞ்சாமை

இ) பொருள் ஈ) செல்வம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

5. பொன்னன் என்பது

அ) தெரிநிலைவினை ஆ) தன்வினை

இ) பிறவினை ஈ) குறிப்பு வினை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

6. காவிரியாறு மெல்லச் சலசலத்துப் பாய்கிறது. இச்சொல்லியத்தில் இடம்பெற்றுள்ள சலசல என்பது

அ) அடுக்குத்தொடர் ஆ) இணைமொழி

இ) இரட்டைக்கிளவி ஈ) அடுக்கிடுக்குத்தொடர்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

7. குமரிக்கண்ட வரலாறு பற்றிக் கூறும் நூல்

அ) குறுந்தொகை ஆ) திருக்குறள்

இ) பரிபாடல் ஈ) தொல்காப்பியம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

8. காலங்காட்டும் இடைச்சொல்

அ) சாரியை ஆ) இடைநிலை

இ) விகுதி ஈ) சந்தி

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

9. காமர் மாலை அருகசைய நடந்தாய் என்று இளங்கோவடிகள் பாடியது

அ) மாலையை ஆ) கடலை

இ) காவேரியை ஈ) மயிலை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

10. கழகக்கால ஆடவர் மிகப்பெரும் பேறாக விரும்பியது

அ) நன்மக்களை ஆ) செல்வத்தை

இ) பெரும்புகழை ஈ) வீரச்சாவை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

11. கேளேன் என்னும் எதிர்மறையின் உடன்பாட்டு வினை

அ) கேட்பேன் ஆ) கேட்கிறேன்

இ) கேட்டேன் ஈ) கேளான்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

12. பாடினி எனப்படுபவள்

அ) நடிகை ஆ) இசைக்குல ஆண்

இ) கூத்தி ஈ) இசைக்குலப் பெண்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

13. ஒருவரின் கூற்றைக் குறிப்பிடும்பொழுது பயன்படுத்தப்படும் நிறுத்தற் குறி

அ) முற்றுப்புள்ளி ஆ) இரட்டைமேற்கோட்குறி

இ) வியப்புக்குறி ஈ) அரைப்புள்ளி

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

14. பின்வருவனவற்றுள் அஃறிணைக்குரிய சொல்

அ) மாணவன் ஆ) பட்டம் இ) அரசன் ஈ) சிறுவன்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

15. கடலில் மூழ்கிப்போன குமரிக்கண்டத்தில் இருந்து சிதறிய துண்டுகளே ______________ ஆசிய நாடுகளாகும்.

அ) தென்கிழக்கு ஆ) தென்மேற்கு

இ) வடகிழக்கு ஈ) வடமேற்கு

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

16. வினையாலணையும் பெயருக்கு எடுத்துக்காட்டு

அ) படித்து ஆ) படித்த

இ) படித்தான் ஈ) படிப்பவன்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

17.மீன்பாடும் வாவியுள்ள பட்டினம்

அ) மட்டக்களப்பு ஆ) மன்னார்

இ) திருமலை ஈ) முல்லைத்தீவு

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

18. கானகம் என்பது

அ) தனிமொழி　　　　ஆ) தொடர்மொழி

இ) பொதுமொழி　　　　ஈ) நிலைமொழி

அ) ☐　ஆ) ☐　இ) ☐　ஈ) ☐

19. எழுதினான் என்பது

அ) வினையெச்சம்　　　　ஆ) வினைமுற்று

இ) குறிப்பு வினை　　　　ஈ) பெயரெச்சம்

அ) ☐　ஆ) ☐　இ) ☐　ஈ) ☐

20. படிப்பித்தான் என்ற பிறவினையைத் தன்வினையாக மாற்றினால்

அ) படித்தான்　　　　ஆ) படித்தவன்

இ) படிப்பான்　　　　ஈ) படியான்

அ) ☐　ஆ) ☐　இ) ☐　ஈ) ☐

21. சினைப் பெயருக்கு ஓர் எடுத்துக்காட்டு

அ) பெட்டி　　ஆ) கருமை　　இ) இலை　　ஈ) காலை

அ) ☐　ஆ) ☐　இ) ☐　ஈ) ☐

22. முகவுரை முடிவுரை என்பன இடம் பெறுவது

அ) இசையில்　　　　ஆ) கட்டுரையில்

இ) கவிதையில்　　　　ஈ) நாடகத்தில்

அ) ☐　ஆ) ☐　இ) ☐　ஈ) ☐

23. பின்வருவனவற்றுள் குற்றியலுகரச் சொல்

அ) எள்ளு　　ஆ) பயறு　　இ) அறிவு　　ஈ) வலு

அ) ☐　ஆ) ☐　இ) ☐　ஈ) ☐

24. பெயர்ச்சொல் பொருளை உணர்த்தும் வினைச்சொல் உணர்த்துவது

அ) பொருளை ஆ) வேற்றுமையை இ) செயலை ஈ) பெயரை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

25. குழலி ஓவியம் வரைந்தாள். இச் சொல்லியத்தில் வந்துள்ள செயப்படு பொருள்

அ) ஓவியம் ஆ) குழலி
இ) வரைந்தாள் ஈ) வரை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

26. குடி எனும் வினையடியால் வரும் வினைமுற்று

அ) குடியரசு ஆ) குடிகள்
இ) குடிக்கிறாள் ஈ) குடிசை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

27. நின்றனர் என்பது

அ) ஆண்பால் ஆ) பலவின்பால்
இ) பலர்பால் ஈ) ஒன்றன் பால்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

28. இலங்கைத்தீவு ஆங்கிலேயர் ஆட்சியில் இருந்து விடுபட்ட ஆண்டு

அ) 1916 ஆ) 1933 இ) 1948 ஈ) 1972

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

29. ஆடவர் என்றால்

அ) ஆடுபவர் ஆ) ஆயர் இ) பெண்கள் ஈ) ஆண்கள்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

30. பின் வருவனவற்றுள் சார்பெழுத்து

அ) ஏ ஆ) இ இ) டி ஈ) உ

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

புள்ளிகள் 30

## 2) பந்தியை வாசித்து; வினாக்களுக்கு முழுவிடை தருக.

கதிரவனுக்குப் பொங்கல்விழா எடுத்தது போல் முன்னாளில் தமிழர் மதிக்கும் விழா எடுத்தனர். தைப்பொங்கலை இன்றும் நாம் கொண்டாடிக் கொண்டிருக்கின்றோம். ஆனால் மதிக்கு எடுக்கப்பட்ட இந்திரவிழாவை முற்றாக மறந்துவிட்டோம். மாற்றாரால் மறக்கவைக்கப்பட்டோம். அறுவடை முடிந்து ஓய்வாக இருக்கின்ற சித்திரைத் திங்களிலே இருபத்தெட்டு நாட்கள் இவ்விழாவை எடுத்தனர். இவ்விழாவைக் (இந்திரவிழா) கடலாடும் விழா என்று சிலப்பதிகாரம் கூறுகிறது. இளவேனிற் காலத்தில் மரஞ்செடிகொடி, புல்பூண்டு என்பன வளர்ந்து இருக்கும். பார்த்த இடமெல்லாம் வண்ணவண்ணப் பூக்கள் பூத்து நறுமணம் காற்றில் கமழ்ந்து வரும். வண்டுகளும் தும்பிகளும் இசைபாடிவரும். இந்த இனிய சூழலிலுள்ள இளவேனிலில் விழாவெடுத்து மகிழ்ந்தனர் தமிழர். இந்த விழா நாட்களில்தான் மன்றல் (திருமணம்) நிகழ்வுகளையும் நிகழ்த்தினர். இணையர்கள் கடற்கரையில் தங்கியிருந்து கடலாடி (கடற்குளிப்பு) மகிழ்ந்தனர். ஆரியர்களது ஏமாற்று வேலைகள் தமிழரிடையே புகுந்தபின் இவ்விழா சித்திரை வருடப்பிறப்பாக மாறியது. அதன்பின் நாம் இந்த இனிய விழாவை மறந்து சித்திரை ஆண்டுப் பிறப்பைக் கொண்டாடுகின்றோம். சித்திரை ஆண்டுப் பிறப்பு தமிழருடையது அல்ல அது ஆரியர்களுடையது. தமிழருடைய புத்தாண்டு தைமுதல் நாளில் வரும் தைப்பொங்கல் ஆகும். எனவே நாம் தமிழருடைய நன்னாட்களை அறிந்து அவற்றையே கொண்டாடுவோம்.

1. கடலாடும் விழா பற்றிச் சொல்லும் நூல் எது?

______________________________

______________________________

2. யாருடைய ஏமாற்று வேலைகளால் கடலாடும் விழா சித்திரை வருடப்பிறப்பாக மாறியது?

______________________________

______________________________

3. இளவேனிற் காலத்தில் எவை இசைபாடி வரும்?

______________________________

______________________________

4. இப்பந்தியில் இடம்பெற்றுள்ள அடுக்குத்தொடர் யாது ?

______________________________

______________________________

5. நாம் யாருடைய நன்னாட்களை அறிந்து கொண்டாடுவோம்?

______________________________

______________________________

புள்ளிகள் 10

## 3) பாடநூல் வினா - ஏழினுள் ஐந்திற்கு விடை தருக.

1. கழககாலத் தமிழரின் வாழ்க்கை முறை எதையொட்டி இருந்தது?

_______________________________________________

2. எது கேட்டு படை வீரர் போருக்கு எழுந்ததாகக் கவிஞர் காசிஆனந்தன் கூறுகின்றார்?

_______________________________________________

3. யாருடைய தலையில் சேரன் செங்குட்டுவன் கல்லைச் சுமந்து வரச் செய்தான்?

_______________________________________________

4. அச்சமின்றி ஆடிப்பாட வேண்டுவது எது என்று கவிஞர் கண்ணதாசன் கூறுகின்றார்?

_______________________________________________

5. ‘‘தமிழ் மேல் ஆணை’’ என்ற பாடலில் வெளிப்படுத்தப்படும் உணர்வு யாது?

_______________________________________________

6. இலெமூரியாக் கண்டத்தின் பழந்தமிழ்ப் பெயர் என்ன?

_______________________________________________

7. விண்ணுந்தில் வந்த சிலர் கண்ணகியை விண்ணகத்திற்கு அழைத்துச் சென்றனர் என்ற செய்தியைச் சேரன் செங்குட்டுவனிடம் கூறியவர்கள் யார்?

_______________________________________________

| புள்ளிகள் 10 |
|---|

**4) கவிதையைத் தொடர்து எழுதுக.**

நூலைப்படி நூலைப்படி நாளும்
நல்ல நூலைத் தேடிப்படி

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

புள்ளிகள் 10

**5) இலக்கண / மொழியியல் வினாக்கள் அனைத்திற்கும் விடை தருக.**

1. புணர்ச்சி எத்தனை வகைப்படும்? இயல்புப் புணர்ச்சிக்கு ஓர் எடுத்துக் காட்டுத் தருக?

____________________________________________________________

இயல்புப் புணர்ச்சி :- ________________________________________

2. தொடர் மொழி, தனிமொழி ஒவ்வொன்றிற்கும் ஒவ்வேர் எடுத்துக்காட்டுத் தருக?

தொடர் மொழி :- ____________________________________________

தனி மொழி :- ____________________________________________

3 . பிறவினை விகுதி எழுத்துகள் எவை?
ஒவ்வொன்றுக்கும் ஒவ்வோர் எடுத்துக் காட்டுத் தருக?

_______________________________________________

_______________________________________________

_______________________________________________

4 . குற்றியலுகரம் எத்தனை வகைப்படும்?
வன்றொடர்க் குற்றியலுகரம் உயிர்த்தொடர்க் குற்றியலுகரம்
என்பனவற்றிற்கு எடுத்துக் காட்டுத் தருக?

_______________________________________________

வன்றொடர்:- ______________________________

உயிர்த்தொடர்:- ______________________________

5 . செய்வினைச் செல்லியம் ஒன்றும் செயப்பாட்டு வினைச் செல்லியம்
ஒன்றும் தருக

செய்வினை :- ______________________________

______________________________

செயப்பாட்டுவினை:- ______________________________

______________________________

புள்ளிகள் 15

**6) பந்தியை வாழிட மொழியில் மாற்றி எழுதுக.**

**மிகச் சிறந்த இலக்கியங்கள் தமிழில் உள்ளன. அவற்றுள் சிலப்பதிகாரம் பெருஞ்சிறப்புடையது. இது இளங்கோவடிகளால் எழுதப்பட்டது. இது தமிழர்களுடைய வாழ்க்கை வரலாற்றையும் பண்பாட்டையும் கூறுகிறது. சிலப்பதிகாரம் கண்ணகி, மாதவி, கோவலன் ஆகியோரின் கதையைக் கூறுகிறது. புறநானூறும் ஒரு சிறந்த இலக்கிய நூலாகும். இது தமிழரின் வீரத்தைப் பற்றிக் கூறுகிறது.**

புள்ளிகள் 05

**7) தரப்பட்டுள்ள தலைப்புகளில் ஒன்றைத் தெரிவுசெய்து 200 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.**

★ கடல் கொண்ட தமிழகம்.

★ தமிழ்க்கல்வி கற்பதால் ஏற்படும் நன்மை.

★ கழகத்தமிழ் இலக்கியங்கள்.

புள்ளிகள் 20